**C.C No. 194/2010 20.10.2022 விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 1.30**

**அ.சா.1 ஜெயேஸ்குமார் என்கிற ராகேஷ்கிருஷ்ணா, த-பெ பாஸ்கரன் என்பவரின் முதல் விசாரணை தொடர்ச்சி :**

நான் மாவட்ட குற்ற பிரிவு ஆய்வாளரிடம் எனது புகாரில் எனக்கு வழங்கப்பட்ட படிப்புக்கான சான்றிதழ் போலி என்றும், நான் அந்த படிப்பை இடையில் நிறுத்திவிடுவதாகவும், எனது பணத்தை மீட்டுத் தருமாறு கேட்டுக் கொண்டேன். என்னிடம் காட்டப்படும் 1ம் எதிரி எனக்கு வழங்கிய எனது பெயரில் தஞ்சாவூர் Electropathic மருத்துவ கல்லூரியில் B EMS என்ற 4 1/2 ஆண்டு படிப்பு படித்ததாக வழங்கப்பட்ட போலி சான்று எனக்கு சாதாரண தபால் மூலம் அனுப்பப்பட்டது. (**அந்த போலி சான்று அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) என்னிடம் காட்டப்படும் Delhi NEHM ல் அங்கீகாரம் பெற்ற எலக்டோபதி மெடிக்கல் காலேஜ் பற்றிய விபரம் Website மூலம் பதிவு இறக்கம் செய்யப்பட்டது ஏழு பக்கங்கள் நான் புகாருடன் அளித்தேன். (**அந்த எலக்டோபதி மெடிக்கல் காலேஜ் பற்றிய விபரம் Website ரிப்போர்ட் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) என்னிடம் காட்டப்படும் பட்டமளிப்பு விழாவில் சான்று வழங்கிய போட்டோ, அதன் நெகட்டிவ் 13 வது ஆவணத்தில் உள்ளது, (**அந்த புகைபடம் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் புகாரை மாவட்ட காவல் கண்காணிபாளரிடம் கொடுத்தேன். பின்னர் ஆய்வாளர் தாமோதரனை பார்த்து எழுத்து மூலமான புகாரினை அளித்தேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 யை நான் தட்டச்சு செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். அ.சா.ஆ.1 ல் உள்ள விபரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. அ.சா.ஆ 1 ல் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் என்னுடையதுதான். அ.சா.ஆ.1 ல் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் புகார் அளித்தது துளசி தாசன் என்பவர் மீது என்றால் சரிதான். அவர் 17.10.2003 அன்று இறந்து விட்டார் என்றால் அது குறித்து நான் கேள்விபட்டேன். நான் மற்ற எதிரிகள் ஆகிய நற்பவி, பொற்செழியன், டாக்டர்

**C.C No. 194/2010   20.10.2022**

தியாகராஜன் ஆகியோர் மீது புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். அவர்களை எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் துளசிதாசன் என்பவரிடம் முதலில் ரூ.15,000/-க்கு வரைவு காசோலை அவரது பெயரிலும், மீதி பணம் ரூ.25,000 /- மற்றும் ரூ.10,000/-த்தை ரொக்கமாக செலுத்தினேன். மேற்கூறிய வரைவு காசோலையை நான் நகல் எடுக்கவில்லை, அதனை போலீசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். BEMS கோர்ஸ் என்பது 4 1/2 ஆண்டுகளுக்கான படிப்பு என்றால் சரிதான். அந்த BEMS கோர்ஸ்ஸை 6 மாதங்களில் எவ்வாறு சான்றிதழ் வழங்க இயலும் என சந்தேகம் வந்தது. நான் அதற்கு முன்பாகவே பணம் செலுத்தியிருந்தேன். அ.சா.ஆ.2 சான்றிதழ் எனக்கு போஸ்டலில் வந்த கவரை நான் காவல் துறையிடம் கொடுக்கவில்லை. அது எங்கிருந்து வந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. அந்த அ.சா.ஆ 2 சான்றிதழில் ரிஜிஸ்ட்ரார் என்ற இடத்தில் உள்ள கையெழுத்து யார் கையெழுத்து செய்தார்கள் என்றால் தெரியாது. இந்த சான்றிதழில் எதிரிகளின் பெயரோ, கையெழுத்தோ இல்லை என்று சொன்னால் சரிதான். அ.சா.ஆ.3 யை நான்தான் பதிவு இறக்கம் செய்தேன் என்பதற்கு குறிப்பு எதுவும் இல்லை. நான் புகார் அளித்த பின்பு துளசிதாசன் ரூ.50000/- த்தை காவல் நிலையத்தில் கொடுத்தார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் 1ம் எதிரியிடம் தொகை செலுத்துவதற்கு முன்பாக கோர்ஸ் குறித்து பிராஸ்பக்டஸ்ஸை படித்துப் பார்த்துவிட்டுத்தான் 1ம் எதிரியிடம் தொகையை வழங்கினேன் என்றால் சரிதான். இவ்வழக்கிற்கும் எதிரி 2, 3, 4 எதிரிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரிதான். நான் 1வது எதிரி மீது மட்டும்தான் புகார் அளித்தேன் என்றும், மற்ற எதிரிகள் மீது புகார் அளிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். 2ம் எதிரி நற்பவி காவல் ஆய்வாளர் தாமோதரன் மீது மனித உரிமை ஆணையத்தில் புகார் அளித்ததால் இவ்வழக்கில் எதிரிகளாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது.

**C.C No. 194/2010   20.10.2022**

இவ்வழக்கில் 2 முதல் 4 எதிரிகள் பொய்யாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும், அவர்கள் மீது எவ்வித ஆவணங்களும் இல்லை என்று சொன்னால் சரிதான்.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக முடிவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.